Chapter *XXIII Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT<br>TIRUNELVELI | |
|---|---|---|
| Calendar | SC.No.882/2025 | |
| Miscellaneous | | |
| Preliminary Register | | |
| Sessions | | |
| Deposition of Witness for | Prosecution | P.W. 6 |
| | Defence | |
| Name | திரு.விஜயகுமார் | |
| Father's Name : | திரு.முருகேசன் | |
| Village : | சேர்ந்தமரம் | |
| Taluk : | சங்கரன்கோவில் | |
| Calling : | அரசு தரப்பு சாட்சி | |
| Age : | 25 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 5th day of June 2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது சேர்ந்தமரம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.09.2025ம் தேதி சேரன்மகாதேவி காவல்நிலையத்தில் காவல் உதவியாளராக பணியாற்றிபோது 16.00 மணிக்கு நிலைப்பொறுப்பில் இருக்கும்போது கூனியூர் மேலவடக்குதெருவைச்சேர்ந்த செல்லப்பாண்டியன் மகன் தளவாய் ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று புகார்மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 396/2025

சட்டப்பிரிவுகள் 296(b), 109(1), 351(3) BNS மற்றும் Section 25 (1) (A) Arms Act ஆக வழக்கு பதிவு செய்தேன். அதன் அசல் முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவினையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர், சேரன்மகாதேவி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட காவல் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.தர்மராஜ் அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். தளவாய்ராஜா கொடுத்தபுகார் மனு **அ.சா.ஆ.4** ஆகும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். . இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். காவல் ஆய்வாளர் திரு.தர்மராஜ் அவர்களுடன் நான் பணிபுரிந்ததால் அவர் கையெழுத்து எனக்கு பரிச்சீயம். அதனால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை நகலை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் 17.09.2025ம் தேதி 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், சுப்பிரமணியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வைமகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் சாட்சிகள் தளவாய்ராஜா, ராஜேஷ், பிரகாஷ், குமார், சுப்பிரமணியன் மற்றும் உதவி ஆய்வாளராகிய என்னையும் சேர்த்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்னர் அன்றையதினம் இரவு 7.00 மணிக்கு சேரன்மகாதேவி பழைய பஸ் ஸ்டாண்ட் அருகில் எதிரி வீரமணிகண்டன் என்ற பாட்டில் மணி என்பவரை கைது செய்து சாட்சிகள் கனகமுத்து என்ற சதீஷ், முருகன் ஆகியோர் முன்னிலையில் எதிரியை விசாரிக்க எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி தனது சண்டையில் பின்னால் முதுகில் மறைத்துவைத்திருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரி மற்றும் சொத்து சகிதம் நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற வழிக்காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிகப்பட்ட பகுதி **அ.சா.ஆ 8** ஆகும். அரிவாள் கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ 9** ஆகும். கைப்பற்றப்பட்ட அரிவாள் **சா.பொ.1** ஆகும். அன்றையதினம் சான்றுப்பொருளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 95 **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் சாட்சிகள் கனகமுத்து என்ற சதீஷ், முருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அவர் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 26.09.2025ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அவரது விசாரணையில் எதிரியையும், சம்பவத்தையும் தொடர்ப்புபடுத்தி கூறியுள்ளார்கள்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

நான் முதல் விசாரணையில் சொன்ன மாதிரி, சொன்னநேரத்தில், புகார்தாரர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலம் புகார் கொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எங்கள் காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்றம் மற்றும் நீதிபதி குடியிருப்பிற்கு 10

நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கை காலம் எண். 15 நேரம்குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோன்று சொன்ன நேரத்தில், சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் ஆய்வாளர் திரு.தர்மராஜ் சொன்னநேரத்தில் புலன் விசாரணை ஆரம்பித்தாக சொல்வதும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. அதே போன்று எந்த சாட்சிகளையும் விசாரிக்காமல் விசாரித்தாக ஆவணங்கள் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியை மேற்படி சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் கைது செய்ததாக சொல்வதும், அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் சா.பொ.1 ஐ அத்தாட்சி மூலம் கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. அத்தாட்சி, சான்றுப்பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் சொன்ன நேரத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. சான்றுபொருளுக்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சான்றுப்பொருட்கள் மற்றும் சான்று ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு ஆய்வாளர் அவர்களால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் சரியாக புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது ஒருதலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.